**எல்ல பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

# 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 ஏப்ரல் 22 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 யூலை 16 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 யூலை 21 திகதியும் தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து எல்ல பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இன் நிதிநிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு ஒப்பந்த சென்மதியான நிலுவை ரூபா 3,453,397 ஆக இருந்த போதிலும் ரூபா 4,634,309 ஆக காட்டப்பட்டுள்ளன. | சரியான முறையில் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | சரி செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன். |

### ஆ) வேறுபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு ஊழியர் கடன்மீதி நிதிகூற்றுக்களின் படி ரூபா 9,680,602 ஆகவும் மற்றும் ஊழியர் கடன் பதிவேட்டுப்படி ரூபா 10,163,369 ஆகவும் காட்டப்பட்டமையால் ரூபா 482,767 வேறுபாடு ஆவதானிக்கப்பட்டுள்ளன. | கணக்கு மீதிகள் ஒப்பீடு செய்யப்பட வேண்டும். | சரி செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன். |

**(இ) கணக்காய்வுக்கென சாட்சிகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 382,686,695 பெறுமதியான 05 கணக்கு விடயம் தொடர்பாக சொத்து பதிவேடு, விபரமான இணைப்புக்கள், விலை மதிப்பீட்டு அறிக்கை மற்றும் உரிமையை உறுதிப்படுத்துவதற்கான ஆவணம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்த தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டு கணக்குகள் சமர்ப்பிக்கும் போது சான்றுகள் வழங்குவோம். |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1978 இலக்க 41 ஆகிய நகர அபிவிருத்தி சட்டம் 8(1) பந்தி | சபை எல்லைக்குள் உள்ள 2016 ஆண்டிலிருந்து 2019 வரைக்கும் அனுமதியற்ற கட்டடம் 58 சம்மந்தமாக நடவடிக்கை எடுக்கவில்லை. | சட்டத்தின் அதிகாரப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |
| (ஆ) | 1980 இலக்கம் 47 ஆகிய தேசிய சுற்றாடல் சட்டம் (ii) வது பிரிவில் 10(1) (ஆ)(ஒ) உபபந்திகள் மற்றும் 1988 இலக்கம் 56 மற்றும் 2000 இலக்கம் 53 ஆகிய சட்டத்தில் மாற்றம் செய்யப்படவில்லை. | எல்ல நகரத்தில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் வெளிநாட்டவர் விடுதிகள் மற்றும் விடுதிகள் மற்றும் வேறு இடங்களில் இருந்து மலசல கழிவுகள் திறந்த சூழலில் வீசப்பட்டன. | சட்டத்தின் அதிகாரப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,560,686 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 101,893 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான மூலம் | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவைகள் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 4,685,000 | 5,225,452 | 2,795,045 | 2,430,407 | 4,478,630 | 4,476,584 | 2,919,985 | 1,556,598 |
| (ii) | வாடகைகள் | 2,085,280 | 1,025,116 | 720,160 | 304,956 | 2,200,000 | 1,474,116 | 829,476 | 644,640 |
| (iii) | அனுமதிப் பத்திர கட்டணங்கள் | - | 1,993,005 | 1,993,005 | - | - | 2,525,800 | 2,525,800 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 3,895,550 | 3,011,400 | 2,420,696 | 590,704 | 3,845,000 | 2,528,998 | 2,282,090 | 246,908 |
| | மொத்தம் | 10,665,830 | 11,254,973 | 7,928,906 | 3,326,067 | 10,523,630 | 11,005,498 | 8,557,351 | 2,448,146 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒரு வருடத்திற்கு மேலதிகமான காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 5,216,687 நிலுவை ஆதனவரிக் கட்டணம் அறவிடப்படவில்லை. | நிலுவை ஆதனவரிக் கட்டணம் அறவீடு செய்யப்பட வேண்டும். | நிலுவை ஆதனவரிக் கட்டணம் அறவீட நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ஆ) | 02 வரடத்திற்கு மேலாக காணப்பட்ட கிடைக்க வேண்டிய வருமான கடனாளிகள் ரூபா 31,867,245 மற்றும் ஒப்பந்த கடனாளிகள் 3,006,140 ஆக தொகை மீளாய்வாண்டிலும் அறவிடப்படவில்லை. | நிலுவை கடன் மீதி அறவிடப்பட வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு கிடைக்க வேண்டிய ரூபா 2,637,960 பெறுமதியான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் கிடைக்க வேண்டிய ரூபா 11,552,584 பெறுமதியான முத்திரைக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் நிலுவை முத்திரைக் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். | நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் நிலுவை முத்திரைக் கட்டண கூடுதலான தொகை கிடைத்துள்ளது. மிகுதி கிடைக்க நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் பொதுச்சுகாதாரம், பொதுப்பயன்பாட்டுச்சேவைகள், பொது வழிகள், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபை சட்டத்தின் 126 பந்தியின் பிரகாரம் 30 நோக்கம் செய்வதற்கு உபவிதிகள் செய்யப்படவேண்டியிருந்த போதும் மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 04 நோக்கங்களுக்காக உபவிதிகள் செய்யப்பட்டது அல்லது உள்ளீர்ப்பு செய்திருக்கவில்லை. | தற்போது செய்யப்படாத உபவிதிகளை உள்ளீர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு 04 உபவிதி உள்ளீர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன் |

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபை ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 தொடர்பாக அறிவை பெற்றிருப்பினும் சபையுடன் தொடர்புபடுத்தி இனங்காணப்பட்ட நிலை பேறான அபிவிருத்தி இலக்கு மற்றும் நோக்கு என்பவற்றை அளவிட்டுக்கொள்ளும் குறிகாட்டிகளை இனங்கண்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்கு மற்றும் நோக்கத்தை அளவீடு செய்யும் குறிக்காட்டிகளை இனங்கண்டு அதற்கிணங்க வருடாந்த இலக்குகளை அடைவது தொடர்பான விருத்தி மட்டத்தை அளவிட வேண்டும். | நடைமுறைப்படுத்துவதற்கு குறிப்பேடுத்துள்ளேன். |

(இ) சுற்றுச்சூழல் பிரச்சனைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
| --- | --- | --- |
| திண்மக் கழிவுகள் மீள்சுழற்சி செய்தல் மற்றும் திண்ம கழிவு அகற்றல் முகாமைத்துவ இடம் ஒன்றும் நிறுவ 5 ஏக்கர் காணி வழங்கப்பட்டு சாத்தியப்பாட்டு அறிக்கை செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்ட போதிலும் அந்த முகாமைத்துவ நிலையத்தில் கட்டுப்பாடு எல்ல நகரத்தில் உள்ள மைதான காணியில் ஒவ்வோர் இடத்திலும் குப்பை அகற்றல் செய்யப்பட்டிருந்தது. | சரியாக இடத்தில் திண்மக் கழிவு முகாமைத்துவ செயன்முறைத் திட்டம்மேற்கொண்டு நடைமுறைப்படுத்த வேண்டும். | விரைவாக அந்த பிரதேசத்தில் உள்ள திண்மக் கழிவு முகாமைத்துவத்தை ஆரம்பிப்பேன். |

## 3.2 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | சபையின் நிலையான சொத்து பதிவேடு சரியான முறையில் மற்றும் இற்றைப்படுத்தி நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்து பதிவேடு சரியாக பேணப்பட வேண்டும். | இற்றைப்படுத்தி நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ஆ) | இரு வருடத்திற்கு மேலாக காணப்பட்ட செலவினக் கடனகொடுநர் மற்றும் ஒப்பந்த கடன்கொடுநர் நிலுவை ரூபா 6,984,352 பெறுமதியானவை தீர்க்கப்படவில்லை. | சென்மதியாளர் மீதிகள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். | தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
| --- | --- | --- |
| 18 குடிநீர் திட்டங்களில் புதிய நீர் இணைப்பு 1357 கொடுக்கப்பட்ட போது அதில் 515 குடிநீர் இணைப்புக்காக மீற்றர் வாசிப்பு பொருத்தப்படாமல் நிலையான கட்டணம் அறவிடப்பட்டது. | பண்ணிமீற்றர் வாசிப்பு பொருத்தப்பட்டு நீர் கட்டணம் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | மீற்றர் வாசிப்பு பொருத்த ஏற்பாடு செய்ய வேண்டும். |

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு அனுமதிக்கப்பட்ட பதவியணயில் 17 பதவிகளுக்கு வெற்றிடம் நிரப்பப்படவில்லை. | பதவியினர் வெற்றிடம் நிரப்பப்பட வேண்டும். | வெற்றிடம் நிரப்புவதற்கு விண்ணப்பித்துள்ளோம் பண்ணியுள்ளேன். |

## 3.5 வருடாந்த பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. | பெறுகைத் திட்டம் தயாரிக்க வேண்டும். | 2020 வருடத்திற்காக தயாரிக்கின்றோம். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 கணக்காய்வு முகாமைத்துவ குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் 2 மட்டுமே நடாத்தப்பட்டிருந்தது. | குறைந்தது ஒவ்வொரு காலாண்டிற்கும் ஒன்றுப்படி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் நடாத்தப்பட வேண்டும். | எதிர்வரும் வருடத்தில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் சரியாக நடத்துகின்றேன். |